**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் செய்யூர்</u>**
**<u>அசல் வழக்கு எண். 19/2020</u>**

இந்நீதிமன்ற எழுத்தர் திரு J. மோகன் Grade –III Bench Clerk என்பவரால் முறையோடு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் 1 ஆம் சாட்சியத்தின் வாக்குமூலம் 1875 ம் ஆண்டின் 10வது சட்டத்தின் வரையறைகளுக்கு உட்பட்டு 2022ம் ஆண்டு நவம்பர் திங்கள் 24 ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர்பாலகிருஷ்ணன்<br>**(PW2 )**<br>வயது. | நாள் **24/11/2022** |
| த/பெ. ஏழுமலை | தொழில் |
| கிராமம் | வட்டம், |

<u>வா.சா.2 அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் 1 முதல் 4 வரை குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>

1. இந்த வழக்கின் விவரங்கள் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். வாதி எனது உறவினரா என்றால் இல்லை. வாதி எனது வீட்டில் இருந்து 4வது வீட்டில் குடியிருந்தார். அவர் தாவா சொத்தை 2000 ம் ஆண்டு கிரையம் பெற்றார். அதன் சர்வே எண். 762/2 ஆகும். ஆறுமுகம் வழக்கில் உள்ள எ–அட்டவனை சொத்தை கிரையம் பெற்றார் என்றால் ஜக்கு பந்தி உட்பட்ட சொத்தை கிரையம் பெற்றார்.

2.வாதி 5 ம் பிரதிவாதி ஷிலா தேவியிடம் இருந்து எவ்வளவு விஸ்தீரணத்தை கிரையம் பெற்றார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆனால் ஜக்குபந்திக்கு உட்பட்ட அனைத்து சொத்துக்கையும் கிரையம் பெற்றார். வாதி எவ்வளவு விஸ்தீரணத்திற்கு பட்டா பெற்றார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. பட்டா எண் எனக்கு தெரியாது. வாதி கட்டிய வீட்டுடன் தான் சொத்து வாங்கினார் என்றால் சரிதான். வாதி வாங்கிய வீட்டிற்கு கிழக்கால் வாசப்படி என்றாலும் மேற்கு திசையில் வாசல் இல்லை என்றால் சரிதான்.

3. கிழக்காகவே சென்று கிழக்கு பக்கமாகவே மீண்டும் வரவேண்டும் வேறு பக்கம் வழியில்லை என்றால் சரிதான். வாதி கிரையம் வாங்குவதற்கு முன்பே 1ம் பிரதிவாதி வரதராஜனுக்கு தாவா சொத்திற்கு தெற்காக உள்ள வீடு பூர்வீகமாக கிடைக்கப்பெற்றது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு கிழக்கால் வாசற்படி உண்டு என்றால் இல்லை. வடக்கால்

வாசற்படி உள்ளது. அந்த வழியாகத்தான் வந்து மேற்கால் உள்ள காலி இடத்தினை 1ம் பிரதிவாதி அனுபவிப்பார் என்றால் இல்லை. அவ்வாறு செல்ல வழி ஏதும் இல்லை. ஷீலா தேவி கிரையம் கொடுத்த போது மேற்கால் காம்ப்புவுண்ட் சுவர் இருந்ததா என்றால் நாங்கள் கிரையம் பெற்றபோது இல்லை. அந்த காம்ப்பவுண்ட் சுவருக்கு மேற்கு பக்கம் வேளாயுதத்தின் இடம் உள்ளது என்றால் சரியல்ல.

4. வாதி ஷிலா தேவியிடம் இருந்து கிரையம் வாங்கிய போது வீட்டிற்கு மேற்கால் 8 அடி அகல காலி மனை இருந்தது என்று பத்திரததில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த 8 அடியும் சேர்த்து தான் கிரையம் பெறப்பட்டது. அந்த பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் அதில் சாட்சி கையொப்பத்தை நான் தான் செய்தேன். இந்த விவரத்தை ஷீலா தேவியிடம கேட்டால் விவரம் தெரியும் என்றால் சரிதான். இந்தவ ழக்கில் நீதிமன்ற ஆணையர் வந்து வீட்டை அளக்கும் போது அங்கு நானும் இருந்தேன் என்றால் இல்லை. ஷீலா தேவி கிரையம் வாங்கும் போதே 1, 3/4 சென்டை வாங்கினார் என்றாலும், அதே 1, 3/4 சென்டை வாதிக்கு கிரையம் கொடுத்தார் என்றால் ஷீலா தேவி வாங்கிய மனைகள் அத்தனையும் அப்படியே ஆறுமுகத்திற்கு மாற்றம் செய்யப்பட்டது.

5. வாதி 1, 3/4 சென்டை கிரையம் வாங்கி விட்டு 2 சென்டாக பட்டா மாற்றியதால் அதற்கு திருத்தம் செய்ய மனு தாக்கல் செய்யப்பட்டு அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டதன் பேரில் உயர் நீதிமன்றத்தில் சீராய்பு மனு தாக்கல் செய்யப்பட்டு அங்கும் அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வாதி எந்த காலத்திலும் மிகுதியாக இருந்த இடத்தை அனுபவித்தது கிடையாது என்றாலும் 1 ம் பிரதிவாதிதான் அனுபவத்தில் இருக்கிறார் என்றாலும் நான் வாதிக்கு பவ்வியப்பட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>பிரதிவாதிகள் 5 முதல் 6 வரை குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>

6. வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் காலி இடம் தன்கு சொந்தம் என்று பரிகாரம் கோரியுள்ளார். தாவா சொத்தின் சர்வே எண். 762/2 என்றால் சரிதான்.

வாதி இந்த வழக்கில் இரண்டு அட்டவனை சொத்திற்கு வழக்கு தாக்கல்செய்துள்ளார் என்றால் சரிதான். எ– அட்டவனை சொத்தின் விஸ்தீரனம் 1, 3/4 சென்ட் என்றால் விஸ்தீரன்ம் பற்றி எனக்கு தெரியாது. ஜக்குபந்தி படி தாக்கல் செய்யப்பட்டது. பி– அட்டவனை சொத்தின் விஸ்தீரனம் 180 என்றால் சரிதான். பொதுவாக ஒரு நபர் எவ்வளவு விஸ்தீரனத்திற்கு கிரையம் வாங்குகிறார்களோ அந்த விஸ்தீரனத்தை மட்டும் தான் உரிமை கொண்டாட முடியும் என்றால் சரிதான். மேலும் அந்த விஸ்தீரணத்தை தான் அனுபவிக்க முடியும் என்றால் சரிதான்.

7. பிரதிவாதிகள் 5 மற்றும் 6 சிவானந்தம் என்பவரிடம் இருந்து 1991 ம் வருடம் கிரையம் பெற்றார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ. 2 ஷீலா தேவி தாவா எ– அட்டவனை சொத்தை கிரையம் வாங்கிய பத்திரம் என்றால் சரிதான். அவர் கிரையம் பெற்ற சொத்தின் விஸ்தீரனம் 1, 3/4 சென்ட் என்று அந்த அவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த 1, 3/4 சென்டை தான் ஷீலா தேவியும், அவர் மகள் சங்கீதாவும், ஆறுமுகத்திற்கு கிரையம் கொடுத்தார்கள் என்றல் ஷீலா தேவி கிரையம் கொடுத்தார். அந்த பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

8. வா.சா.ஆ.1 பத்திரத்தில் உள்ள சொத்தின் விஸ்தீரனம் 1, 3/4 சென்ம் என்று கண்டுள்ளது என்றால் சரிதான். 1999 ல் ஷீலா தேவி சிவானந்ததிடம இருந்து கிரையம் பெற்ற கிரைய பத்திரத்திலும், ஷீலா தேவி ஆறுமுகத்திற்கு கிரையம் கொடுத்த கிரைய பத்திலும் தாவா பி– அட்டவனை சொத்தை கிரையம் பெற்றதாக இல்லை என்றால் சரிதான்.

உண்மையாகவே தாவா பி– அட்டவனை சொத்து ஷிலா தேவி உரிமை பெற்றிருந்தாலோ அல்லது அனுபவத்தில் இருந்திருந்தாலோ அந்த சொத்தை பத்திரத்தில் குறிப்பிட்டு சொல்லியிருப்பார் என்றால் சரிதான். அவருக்கு பி அட்டவனை சொத்தில் உரிமை இல்லாததால் தான் அவ்வாறு அந்த பத்திரத்தில் குறிப்பிட்டு காட்டவில்லை என்றால் அ வருக்கு உரிமை இருக்கிறதா என்ற எனக்கு தெரியாது. தாவா பி. அட்டவனை சொத்தை ஷீலா தேவி எந்த காலத்திலும் கிரையம் பெற வில்லை என்றாலும் அனுபவிக்கவில்லை என்றாலும் அதை பற்றி எனக்கு தெரியாது.

9.ஷீலா தேவி பி– அட்டவனை சொத்தை ஆறுமுகத்திற்கு கிரையம் கொடுக்கவே இல்லை என்றால் ஷீலா தேவி கிரையம் கொடுத்த

கிரைய பத்திரத்தில் பி– அட்டவனை சொத்து என்று எதுவும் குறிப்பிடப்படவில்லை. பி– அட்டவனை சொத்து எந்த காலத்திலும் ஆறுமுகம் அனுபவிக்கவில்லை என்றாலும் 1 ம் பிரதிவாதி வரதராஜன் தான் அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது போல் வாதி தாவா சொத்தில் அனுபவத்தில் இல்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது)
(மறு விசாரணை இல்லை)

Taken down by me in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/Tmt. N. Preethi.,
DM Cum JM
Cheyyur